




# ஜமாலியன் டைம்ஸ்

தமிழ் மாத இதழ்

இதழ் 6 சுற்று 4 | JAMALIAN TIMES | ஜூன், ஜூலை, 2022


# ஜமால் முகமது கல்லூரி திருச்சி அடையாளங்களில் ஒன்று

## முப்பெரும் விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பாராட்டு






திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் (தன்னாட்சி) கல்லூரி நிறுவனர் நாள் விழா, கல்லூரி வரலாற்றைத் தொகுக்கும் பெருந்திட்டத் தொடக்க விழா, குளோபல் ஜமாலியன்ஸ் பிளாக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா கடந்த 26 தேதி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் வரவேற்றார்.

இதில் காணொலிக் காட்சி வாயிலாக திட்டங்களை தொடங்கி வைத்து, கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் விழாப் பேருரை ஆற்றினார்.

அவர் பேசியதாவது: திருச்சி ஜமால் முகமது கல்லூரி அமைச்சர் நேரு, அமைச்சர் பன்னீர்செல்வம் ஆகிய 2 அமைச்சர்களை உருவாக்கியக் கல்லூரி, தமிழக அரசியல் பண்பாட்டுக்கு இலக்கணமாகத் திகழும் நம்முடைய பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் படித்த கல்லூரியும் இதுதான். இதே போல் இந்தக் கல்லூரியில் படித்தவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகளாக, கல்வியாளர்களாக, பேராசிரியர்களாக, தொழில் அதிபர்களாக விளங்கி வருகிறார்கள்.

ஜமால் முகமது கல்லூரி திருச்சி அடையாளங்களில் ஒன்றாகும். தீரர்களின் கோட்டமாக விளங்கும் திருச்சியில் பல்வேறு கல்விக் கோட்டங்கள் இருக்கின்றன. அதில் தலைசிறந்த கல்விக் கோட்டந்தான் ஜமால் முகமது கல்லூரி. நாட்டுப்பற்று மிக்க தலை சிறந்த தமிழர்கள் இருவரால் உருவாக்கப்பட்ட கல்லூரி அவர்களின் ஒருவர் எம். ஜமால்முகமது, மற்றொருவர் என்.எம்.காஜாமியான் இராவுத்தர். நாட்டுப்பற்று மிக்க இவர்களில் காஜாமியான் இராவுத்தர் 90 ஏக்கர் நிலம் தந்து இருக்கிறார். ஜமால்முகமது கட்டிடத்தைக் கட்டி கொடுத்திருக்கிறார். அதுதான் இன்று நாம் பார்க்கக் கூடிய ஜமால்முகமது கல்லூரி. இது 70 ஆண்டுகளைத் தாண்டி அறிவியக்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 2 பேர்களும் இந்த நாட்டு மக்களுக்கு கல்வியைச் கொடுக்க நினைத்தார்கள். அவர்களது வழித் தோன்றல்களும் நோக்கம் சிதையாமல் இக்கல்லூரியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள். உங்கள் முன்னோர்களுக்கு நீங்கள் செய்யும் உண்மையான அஞ்சலி என்பதும் இதுதான். ஜமால்முகமது கல்லூரி கல்வி குறித்த தேசிய தரமதிப்பீட்டில் 'பு' தரத்தகுதியைப் பெற்று இருக்கிறது. இந்திய அளவில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் 100 கல்லூரிகளில் 65 வது இடத்தில் ஜமால்
முகமது கல்லூரி இருப்பதை அறிந்து உள்ளபடியே பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். இது இன்னும் முன்னோக்கி வரவேண்டும். சிறுபான்மை கல்வி நிறுவனமாக இருந்தாலும், அனைவரும் பயிலும் நிறுவனமாக இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இங்கு தனியாக பயிலக்கூடிய கல்லூரியாகவும் இருக்கிறது. அந்த வகையில் சமத்துவக் கல்லூரியாகவும் செயல்பட்டு வருகிறது.

தனித்திறமைக்கு முக்கியத்துவம் தரும் கல்லூரியாக அமைந்திருக்கிறது. இந்திய அரசு சார்ந்த நிறுவனங்களின் நிதி உதவியை பெற்றுஆராய்ச்சிகள் செய்து வரும் நிறுவனமாக விளங்குகிறது. இந்தக் கல்லூரி மாணவி ரேஷ்மி பரதநாட்டியக் கலையில் உலக சாதனை புரிந்திருக்கிறார். பல்கலைக்கழக ஆற்றல் வளத்தனித்தகுதி பெற்ற கல்லூரி எனப் பாராட்டி இருக்கிறது. இசை.நாடகக்கலைமன்றம்,முதலமாணவர் படை, தேசிய நாட்டு நலப்படை, இளையோர் ரெட் கிராஸ் போன்ற அமைப்புகளும் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. டெல்லி குடியரசுத் தினஅணிவகுப்பில் 16 ஆண்டுகளாக இந்தக் கல்லூரி தேசிய மாணவர் படையினர் அணி வகுத்து வருகிறார்கள். அனைத்து விளையாட்டுப் போட்டிகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது. இத்தகைய தனித் திறமைகளை வளர்ப்பதில் அனைத்துக் கல்லூரிகளும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். கல்வி, படிப்பு, பட்டம் ஆகியவற்றைத் தாண்டிய தனித்திறமைகளும், பல்துறை அறிவாற்றலும் இருக்கக் கூடிய இளைஞர்களால்தான் எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்பட முடியும். அதிக வளர்ச்சியை அடைய முடியும். அந்த நோக்கத்துக்காகத்தான் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தை நமது தமிழக அரசு தொடங்கி இருக்கிறது. பள்ளிக் கல்வித்துறையில் பெருந்தலைவர் காமராசர் காலமும், கல்லூரிக் கல்வியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலமும் சிறப்பாக விளங்கியதைப் போல இந்த ஆட்சிக் காலத்தில் உயர் கல்வி ஆராய்ச்சிக் கல்வியின் போற்காலமாகத் திகழ வேண்டும் என்ற இலக்கோடு நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த பயணத்தில் ஜமால் முகமது கல்லூரி போன்ற தனியார் கல்வி நிறுவனங்களும் துணை நிற்க வேண்டும் என்றார். விழாவில் அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, முனைவர் க.பொன்முடி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கல்லூரி நிர்வாகக் குழு தலைவர் ஹாஜி எம்.ஜே.ஜமால்முகமது பிலால், செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் அ.கா.காஜாநஜிமுதீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே.ஜமால்முகமது, உதவிச் செயலாளர் முனைவர் க.அப்துஸ்சமது, கமிட்டி நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் மதிப்புறு இயக்குநர் டாக்டர் அப்துல்காதர் நிகால், விடுதி இயக்குநர் கே.எம்.முகமதுபாஜில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாரதிதாசன் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் ம. செல்வம், வக்பு வாரியத்தலைவர் எம். அப்துல்ரகுமான், திருச்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ். கதிரவன், செளந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், தியாகராஜன், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அக்பர் அலி உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கல்லூரி துணை முதல்வர் முனைவர் அ.முகம்மது இப்ராஹிம் நன்றி கூறினார்.








## திருச்சி ஜமால் முகமது கல்லூரி நாள் விழா

## சிறப்புவிருந்தினராக மத்தியமண்டலஐ.ஜி.பாலகிருஷ்ணன்

### மாணவிகளுக்கு அறிவுரை







திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் பெண்கள் பிரிவினருக்கான கல்லூரி நாள் விழா நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் இஸ்மாயில் முகைதீன் வரவேற்று, ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார்.

மத்திய மண்டல ஐ.ஜி.

விழாவில் சிறப்பு விருந்தினராக, திருச்சி. மத்திய மண்டல ஐ.ஜி. பாலகிருஷ்ணன். கலந்து கொண்டு கல்லூரி நாள் விழா உரை நிகழ்த்தி மாணவிகளுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார். அப்போது அவர் பேசு கையில், கல்லூரியின் நிறுவனர்கள் ஜமால் முகமது சாகிப் மற்றும் ஜனாப். காஜாமியான் ராவுத்தரின் கல்விப் பங்களிப்பினை வியந்து பாராட்டினார்.

ஜமால் முகமது கல்லூரி தனது கல்விச்சேவையின்மூலமாக பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் மேம்பாட்டிற்காக ஆற்றி யுள்ள பங்களிப்பைச் சுட்டிக்காட்டியதோடு. கல்லூரிக்குள் கற்களாக மாணவர்களை சிற்பங்களாக செதுக்கு பவர்கள் ஆசிரியர்கள் என்றார்.

உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி மற்றும் உணர்வுசார் சமநிலை ஆகிய மூன்றும் வாழ்வின் வெற்றிக்கு முக்கிய அம்சங்கள். நம் செயல்பாடானது பிறருக்குக்
கற்பிப்பதாக இருக்க வேண்டும். அவ்வாறு கற்பிப்பதன் மூலம் பிறர் பயனடைவதோடு, நாமும் ஆழமான அறி வைப் பெறமுடியும். பாட நூல்களைத் தாண்டிய வாசிப்புப் பழக்கம் புதிய அறிவு, படைப்பாற்றல் மற்றும் புதிய கண்டுபிடிப்பு களுக்கு வழிவகுக்கும் என்றும் எடுத்துரைத்தார்.

எந்தவொரு செயலையும் 21 நாட்கள் தொடர்ந்து செயல்படுத்தும்போது அப்பழக்கம் வழக்கமாகி விடும். எனவே நூல் வாசிப்பு பழக்கத்தை வழக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கருப்பு வெள்ளைக்கிடையே. ப ல் ல ா யி ர க் க ண க் க ா ன நிறங்கள் இருப்பதைப் போல வாழ்வில் சந்திக்கும் அனைத்துச் சிக்கல்களுக்கும் பல்வேறுகட்ட தீர்வுகள் உள்ளன. அவற்றுள் நேர்ம றையா வற்றின் மூலம் விடைகாண வேண்டும். எனக் கூறினார்.

மாணவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களைத் தாங்களே சுயமதிப்பீடு செய்து கொள்ள வேண்டுவது அவசியம். இவைகளை மாணவர்கள் தங்களது வாழ்வில் கடைபிடித்தால் தங்களுக்கான வெற்றியை யும் கல்லூரியின் குறிக்கோ ளையும் நிறைவு செய்ய முடியும் என்று கூறி மாணவிகளுக்கு கல்லூரி நாள் விழா வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

கல்லூரியில் சிறந்த பெண் ஆராய்ச்சியாளர் விருதினை வேதியியல் துறை உதவிப்பேராசிரியை ஹேமா சிந்துஜா பெற்றார். பல்கலைக்கழக தரவரிசையில் இடம் பெற்ற 21 மாணவிகளும் ஒவ்வொரு துறையிலும் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற 116 மாணவிகளும் பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இ வ் வி ழ ா வி ல் , கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜீமுத்தீன்,, பொருளாளர் எம். ஜே.ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் முனைவர் கே.அப்துஸ் சமது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு
உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர்
கே.என்.முகமது பாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஹாஜிரா பாத்திமா, நிதி ஆளுநர், முனைவர் ஜார்ஜ் அமலரெத்தினம்,தேர்வு நெறியாளர், கலைப்புல, அறிவியல்புலமற்றும்ஆராய்ச்சிபுல முதன்மையர்கள், துறைத்த லைவர்கள், முன்னாள், இன்னாள் பேராசிரியர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் விழாவில் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கூடுதல் துணை முதல்வர் எம். முஹம்மது சிஹாபுதீன் உள்ளிட்ட பேராசிரியர்கள் செய்திருந்தனர். நிறைவாக துணை முதல்வர் முனைவர் முகமது இப்ராஹிம் நன்றி கூறினார்.

## ஆசிய வலுதூக்கும் போட்டியில்

## தங்கம் வென்ற மாணவருக்கு பாராட்டு



ஆசிய வலுதூக்கும் போட்டியில் தங்கம் வென்ற திருச்சி ஜமால் முகமது கல்லூரி மாணவரை நிர்வாகத்தினர் பாராட்டினர்.

கோயம்புத்தூரில் ஆசிய வலுதூக்கும் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் 111 நாடுகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட வலுதூக்கும் வீரர்கள் பங்கேற்றனர். இதில் இந்திய அணி சார்பில் பங்கேற்ற திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதலாம் ஆண்டு மாணவர் என். பாலமுருகன் 120 கிலோவுக்கும் மேற்பட்ட இடை பிரிவில் (ஜூனியர் பிரிவு) பங்கேற்று தங்கம் வென்றார்.

இவர் ஸ்குவாட் பிரிவில் 250 கிலோ பெஞ்ச்பிரஸ் பிரிவில் 130 கிலோ 145 கிலோ ( உலக சாதனை) வலுதூக்கி தங்கம் வென்று சாதனை படைத்தார். மாணவர் பாலமுருகனை கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர் அ.கா. காஜா நஜீமுதீன், பொருளாளர் எம். ஜே. ஜமால் முகமது உதவி செயலாளர், கே. அப்துஸ் சம்பந்த இயக்குனர் கே. என். அப்துல் காதர் விடுதி இயக்குனர், கே. என். முகமது பாசில், முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் உடற்கல்வி இயக்குனர் பி எஸ் சாயிஷா மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.



Senior Cadet Irshat Ahmed of 2 TN Armd Sqn NCC, Jamal Mohamed College won Gold Medal at Tamilnadu state shooting championship competition @ Rifle Club, Trichy.



JMC Alumni - Kuwait Chapter Conducted on Career Guidance and Skill Empowerment Series (10-06-2022)



Alumni Association - Chennai Chapter - Annual get together




Alumni Association - Singapore Chapter - Jamalians Family Day 2022



ELECTION TO THE SENATE
NOMINATION
at 6.00 p.m. on 22.07.2022 in the Office of the Principal

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

ஆசிரியர்
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

செய்தி ஆசிரியர்
முனைவர். A.R. முஹம்மத் ஷாநவாஸ்
M.Sc.,PGDCA.,M.Ed.,M.Phil.,Ph.D.,

இணை ஆசிரியர்கள்
K. சண்முக வேலாயுதம் M.A., M.Phil.,SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

ஆசிரியர் குழு
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
D. பிரதீபன் M.Sc., SET.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,
மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
V. சிவகுமார், A. முகமது அய்மன்

நிருபர்கள்
K. காவியச்செல்வன், R. வெற்றி செல்வன்,
P. பிரபு மணிகண்டன், T.M. கரண்

ஒளிப்படக் கலைஞர்கள்
K. அரவிந்த் குமார், J. டென்சில் டொமினிக்,
S. அருண்குமார், R.பாலசுப்ரமணியன்

தொடர்புக்கு
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

'ஜமாலியன் டைம்ஸ்' மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

# அறிவுசார் சொத்துரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அவசியம்



அறிவுசார் சொத்து உரிமைகள் குறித்து ஆய்வு மாணவர்கள் புதிய கண்டுபிடிப்பாளர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பினரிடத்திற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றார் சென்னையிலுள்ள அறிவுசார் சொத்து அலுவலக முதுநிலைத் தேர்வாளர் ஆர். வெங்கடேசன்.

ஜமால் முகமது கல்லூரியில் நடை பெற்ற நிகழ்வில் பங்கேற்ற ஆர். வெங்கடேசன் காணொலி வாயிலாக மேலும் பேசியது:

அறிவுசார் சொத்துரிமைகள் என்பவை தொழில், அறிவியல், இலக்கியம் மற்றும் கலைத் துறைகளில் கையாளப்படும் அறிவு சார்ந்த செயல்களுக்கு வழங்கப்படும் சட்ட உரிமைகள் ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் அறிவு சார் சொத்துகளைப் பாதுகாக்க முக்கியக் காரணங்கள் உள்ளன. படைப்பாளிகளின் படைப்புகளுக்கு நிதி மற்றும் பொருளியல் சார்ந்த உரிமைக் ளின் பொருட்டும், பொதுமக்களுக்கு அந்தப் படைப்புகள் சென்றடைவது பொருட்டும் சட்ட வடிவம் கொடுக்க உதவும்.

படைப்புத் திறனை மேம்படுத்தவும், நியாயமான வர்த்தகத்தை ஊக்கப்படுத்தவும், பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு வித்திடுவதற்கும் உதவும்.

அறிவுசார் சொத்துகள் காப்புரிமை, பதிப்புரிமை மற்றும் தொடர்புடைய உரிமைகள் என்ற வகையில் அடங்கும். தொழில் சார்ந்த வடிவமைப்பு, வர்த்தகச் சின்னம், புவிசார் குறியீடு, தாவர வகைகள் பாதுகாப்பு, தொழில் ரகசியங்கள் பாதுகாப்பதிலும் சட்டப் பூர்வத் தீர்வை தருகிறது. எனவே, இன்றைய சூழலில் அனைத்து தரப்பினரும் அறிவுசார் சொத்துரிமைகள் குறித்த விழிப்புணர்வுப் பெற வேண்டியது அவசியம் என்றார் அவர். பின்னர் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், காப்புரிமை தாக்கல் செய்யும் வழிமுறைகள் குறித்தும் விளக்கினார்.

சொத்துரிமைப் பிரிவு ஒருங்கிணைப்பாளரும், வேதியியல் துறை உதவிப் பேராசிரியருமான ஏ. ஜாஹிர் உசேன் வரவேற்றார். கூடுதல் துணை முதல்வர் எம். முகமது சிஹாபுதீன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில், 660–க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர். தாவரவியல் உதவிப் பேராசிரியர் ஆர். ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

# தேசியக் கல்விக் கொள்கையை எதிர்த்து தமிழக மாணவர்கள் போராடத் தயாராக வேண்டும்

## தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் க. பொன்முடி அழைப்பு




தேசியக் கல்விக் கொள்கையை எதிர்த்து தமிழக மாணவர்கள் போராட்டத் தயாராக வேண்டும் என தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி அழைப்பு விடுத்துள்ளார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முப்பெரும் விழாவில் அவர் மேலும் பேசியது:

முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்வி விடுதிக் கட்டணம் என அனைத்தையும் இலவசமாகக் கொடுத்து கிராமபுற மாணவர்கள் அதிகளவில் உயர் கல்வி கற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் பொறியியல் உள்ளிட்ட உயர் கல்விக்கு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சத இட ஒதுக்கீடும் வழங்கப்படுகிறதது.

தற்போது மத்திய அரசு கொண்டு வருவதற்காக் கூறும் தேசியக் கல்விக் கொள்கை என்பது இடைநிற்றலை அதிகரிக்கும் 3, 5, 8 ஆம் வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு என்பது பள்ளி இடைநிற்றலை உருவாக்கும்.

பொறியியல் மருத்துவக் கல்விக்கு இருப்பதைப் போல கலை அறிவியல் கல்லூரிகளில் சேரவும் பொது நுழைவுத் தேர்வைக் கொண்டுவர உள்ளனர் எனவே தேசியக் கல்விக் கொள்கையை கடுமையாக எதிர்க்க வேண்டும்.

தேசியக் கல்விக் கொள்கை திணைக்கப்பட்டால் மாணவர்கள் அதை எதிர்த்துப் போராடத் தயாராக வேண்டும். தமிழகத்துக்கு தற்போதுள்ள 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு, மூன்றாண்டு பட்டப்படிப்பு என்பதே சிறந்த கல்வி முறையாகும்.

தமிழகத்துக்கு பிரத்யேக மாநிலக் கல்வி கொள்கையை செயல்படுத்தவும் அதற்கான வரைவைத் தயாரிக்கவும் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் கல்விக் குழு பரிந்துரைக்கும் பாடத்திட்டத்தையே திமுக அரசு செயல்படுத்தும் என்றார் அவர்.

இந்தியா யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் கே எம் பாதர் மோகிதீன் பேசுகையில் தமிழகத்துக்கான மாநில கல்விக் கொள்கையை இந்தியாவுக்கே முன்னோடியாக இருக்கும் வகையில் தயாரிக்க வேண்டும்.

# அனைத்து சமூகங்களின் முன்னேற்றமே இந்தியாவின் முன்னேற்றம்

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவர் எஸ்.எம். இதயத்துல்லா பேச்சு




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற 71–ஆவது கல்லூரி நாள் விழாவில் (ஆண்கள் பிரிவு) பங்கேற்று, மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி அவர் மேலும் பேசியது:

இந்தியாவின் முன்னேற்றம் என்பது அனைத்து சமூகங்களின் முன்னேற்றத்தில் தான் உள்ளது. கல்வி உங்களை உயர்த்தும், பத விகளைப் பெற்றுத்தரும். ஆனால், அதோடு முடிவடையாது. பிறருக்காக வாழ்வதே வாழ்க்கை. மனிதனுடைய குறுகிய கால வாழ்க் கையில் சுயநலமில்லாது பிறர்நலம் நாடி வாழ்ந்திடவேண்டும்.

'கற்பது கல்வி, பெறுவது அறிவு. கல்வியைச் செயல்படுத்துவதன் மூலமாகவே அறிவைப் ம பெற முடியும் நம்மை அறிந்து கொள்வதன் ஏ மூலமாகவே இப்பிரபஞ்சத்தையும், இறைவயனையும் அறியமுடியும். வாழ்க்கையில் அமைதி பெற இறைவன் மீதான அச்சம் நம்மிடத்தில் வேண்டும். செய்ய வேண்டியதை செய்யவும், செய்யக்கூடாதவற்றை விலக்கவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஈகை, ஒப்புரவு, தானம், தர்மம், ஏழை எளியவர்களுக்கான உதவித்தொகை என அனைத்துச் சமயங்களிலும் உள்ள நற்செயல், சார்ந்த விழுமியங்களை மாணவர்கள் பின்பற்ற வேண்டும் என்றார்.

கல்லூரியில் சிறந்த முதன்மை ஆராய்ச்சியாளர் விருதை வேதியியல் துறை இணைப்பேராசிரியர் ஜாபர் அகமது, தமிழ்த்துறை உதவிப் 'பேராசிரியர் இக்பால், சிறந்த இளம் ஆராய்ச்சியாளர் விருதை கணிதவியல் துறை உதவிப் பேராசிரியர் பிரசன்னா ஆகியோர் பெற்றனர். கல்லூரி கல்விப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த வேதியியல் துறை இணைப்பேராசிரியர் சீனி முபாரக், உதவிப் பேராசிரியர் ரியாஸ் அகமது, கணிதவியல் உதவிப் பேராசிரியர் முகமது

ஜபருல்லாஹ், தாவரவியல் துறை ஆய்வக உதவியாளர் முகமது அக்தாப் முகைதீன் ஆகியோருக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. பல்கலைக்கழகத் தரவரிசையில் இடம் பெற்ற 32 மாணவர்களில் 11 பேருக்கு சான்றிதள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், ஒவ்வொரு துறையிலும் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்று 149 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் கல்லூரியின் செயலர் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் உதவிச் செயலார் அப்துஸ் கல்லூரி ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் கே.என் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் து. ஹாஜிரா ஃபாத்திமா, ஆளுநர் ஜார்ஜ் அமல ரெத்தினம் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலர் பங்கேற்றனர்.

முன்னதாக, கல்லூரி முதல்வர் முகமது இஸ்மாயில் வரவேற்றார். நிறைவாக, கூடுதல் துணை முதல்வர் முஹம்மது சிஹாபுதீன் நன்றி கூறினார்.


# A Discussion on the Construction of GLOBAL JAMALIANS BLOCK











## கிழக்கு மண்டல கைப்பந்து போட்டி

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி



கிழக்கு மண்டல கைப்பந்து போட்டி: திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி

அரியலூரில் நடைபெற்ற கிழக்கு மண்டல கைப்பந்து போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி பெற்றது.

### இறுதி போட்டி

பின்னர் நடைபெற்ற அரை இறுதி போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியும், மயிலாடுதுறை அணியும் மோதின. இதில், ஜமால் முகமது கல்லூரி அணி 25–20, 25–15 என்ற கோல் கணக்கில் மயிலாடுதுறை அணியை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறியது. மற்றொரு போட்டியில் விழுப்புரம் அரசு கலைக்கல்லூரி அணியும், விழுப்புரம் தளபதி அணியும் மோதினர். இதில், விழுப்புரம் தளபதி அணி 25–23, 25–27, 25–16 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு முன்னேறியது.

இதையடுத்து, திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியும், விழுப்புரம் தளபதி அணியினரும் இறுதிப் போட்டியில் மோதினர். இதில் ஜமால் முகமது கல்லூரி அணி 25–16, 25–14 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதல் பரிசை தட்டி சென்றது. 2–வது இடத்தை விழுப்புரம் தளபதி அணி பெற்றது.

### பரிசு

3 மற்றும் 4–ம் இடத்திற்கான போட்டியில் மயிலாடுதுறை அணியும், விழுப்புரம் அரசு கலைக்கல்லூரி அணியும் மோதின. இதில் 25 15, 25–18 என்ற புள்ளி கணக்கில் விழுப்புரம் அரசு கலைக்கல்லூரி அணி வெற்றி பெற்று 3 வது இடத்தை கைப்பற்றியது. 4–ம் இடத்தை மயிலாடுதுறை அணி கைப்பற்றியது. இதையடுத்து, வெற்றி பெற்ற அணிகளுக்கு அரியலூர் எம்.எல்.ஏ. சின்னப்பா பரிசுகளை வழங்கினார்.

முதல் 4 இடங்களை பிடித்த அணிகள் அடுத்தமாதம் சென்னையில் நடைபெற உள்ள மாநில சீனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்பார்கள். போட்டியின் நடுவர்களாக கிருஷ்ணராஜ், முத்துகிருஷ்ணன், பன்னீர்செல்வம், சந்திரசேகர், சுரேஷ்குமார் ஆகியோர் பணியாற்றினர் போட்டிக்கான ஏற்பாடுகளை அரியலூர் மாவட்ட கைப்பந்து அசோசியேஷன் கழகத்தினர் செய்திருந்தனர்.

### கைப்பந்து போட்டி

தமிழ்நாடு கிழக்கு மண்டல சீனியர் கைப்பந்து சாம்பியன் ஷிப் போட்டி அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நேற்று காலை தொடங்கியது. பகல், இரவு ஆட்டங்களாக நடைபெற்ற இந்த போட்டியில் திருச்சி, விழுப்புரம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் திருவாரூர் உள்ளிட்ட கிழக்கு மண்டலத்தை சார்ந்த 10 மாவட்டங்களை சார்ந்த வீரர்கள் பங்கேற்றனர். நாக்கவுட் மற்றும் லீக் முறையில் போட்டிகள் நடைபெற்றன.

இதில் திருச்சி செயின்ஜோசப் கல்லூரி அணி, ஜமால் முகமது திருச்சி அணி, மயிலாடுதுறை அணி, விழுப்புரம் தளபதி அணி, வேல் உடையார் திருவாரூர், நாகை அன்னை தெரசா, அறிஞர் அண்ணா ஆகிய அணிகள் கால் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றன.

# நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்க பேரணி










## ஜமால் முகமது கல்லூரியில்

# உலகப் பெருங்கடல் தின விழிப்புணர்வுப் பேரணி




திருச்சி ஜமால் முகமது கல்லூரி தண்ணீர் சுற்றுச் சூழல் மாணவர் மன்றம் சார்பில், உலகப்பெருங்கடல் தினத்தை முன்னிட்டு கடல் பாது காப்புப் பராமரிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. கல்லூரி வளாகத்தில் தொடங்கிய பேரணியை கல்லூரி செய லாளர் காஜா நஜீமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன். உதவிச் செயலர் அப்துஸ் சமது. திருச்சி தண்ணீர் அமைப்பு செயல் தலைவர் நீலமேகம் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர்கள் வீர சிங்கம், பாபு தாமஸ், கல்லூரி துணை முதல்வர் முகமது இப்ராகிம், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


## STUDENT CORNER




**T.M. KARAN** II B.Sc. VISUAL COMMUNICATION

FIRST CLAP PHOTOGRAPHY - BHARATHIDASAN UNIVERSITY

## PHOTOGRAPHY COMPETITION FIRST PRIZE



**V. ALAGAPPAN** I B.Sc. VISUAL COMMUNICATION